# LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் பொது அறிவிப்பு

Lankaenews.com என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆன்லைன் கட்டுரை மற்றும் அதைத் தொடர்ந்து "சிவில் இன்டலிஜென்ஸ் ஃப்ரண்ட்" என்ற அமைப்பின் நிர்வாகி ஒருவர் எங்கள் துணைத் தலைவர் மற்றும் அவருடன் தொடர்புடைய வணிக நிறுவனங்களுக்கு எதிராக அவதூறான அறிக்கைகளை வெளியிடும் ஊடகக் காட்சிகள் குறித்து எங்கள் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரைகள் மற்றும் வீடியோக்களின் உள்ளடக்கங்களின் உண்மைத்தன்மை குறித்து எங்கள் வணிக நன்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலம் விரும்பிகளிடமிருந்து விசாரணைகளைப் பெற்றுள்ளோம், எனவே பின்வரும் அறிக்கையை வெளியிட விரும்புகிறோம்.

ஆரம்பத்தில், Lankaenews.com இலங்கைக்கு வெளியே தளமாகக் கொண்டது என்பதையும், தொடர்ந்து அவதூரான கட்டுரைகளை வெளியிடுவதில் ஈடுபடுவதற்கு நன்கு அறியப்பட்டதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதன் விளைவாக, அதன் கட்டுரை கண்ணியமான பதிலுக்கு தகுதியானது என்று நாங்கள் நம்பவில்லை. இருப்பினும், ஊடகக் காட்சி, பரந்த அளவிலான சட்டப்பூர்வமான பங்குதாரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் ஒரு பரப்புரை குழுவின் முறையான பத்திரிகையாளர் சந்திப்பிலிருந்து உருவாகிறது, எனவே இது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எனவே, மேற்கூறிய ஆன்லைன் கட்டுரையிலும் ஊடகக் காணொளியிலும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நாங்கள் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறோம், மேலும் அவற்றில் துளி கூட உண்மை இல்லை என்று கூறுகிறோம். பதிவுக்காக, கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இஷாரா டிரேடர்ஸ், 2018 முதல் வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டது. இஷாரா டிரேடர்ஸ் அல்லது LOLC குழுமத்தில் உள்ள எந்த நிறுவனங்களும் வாகனங்கள், மற்றும் மோட்டார் வாகனத்தின் உதிரி பாகங்களை இறக்குமதி செய்வதில்லை.

முடிவாக, மேற்கூறிய அலுவலகப் பொறுப்பாளர், சிவில் புலனாய்வு முன்னணி மற்றும் Lankaenews.com வெளியீட்டாளர் ஆகியோருக்கு எதிராக பொருத்தமான சட்ட நடவடிக்கையைத் தொடங்க எங்கள் சட்ட ஆலோசகருக்கு அறிவுறுத்தியுள்ளோம் என்பதை எங்கள் பங்குதாரர்கள் மற்றும் நலம் விரும்பிகளுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம்.

திரு. கித்சிரி குணவர்தன
குழும தலைமை இயக்க அதிகாரி

LOLC Holdings PLC
Company Registration No: P Q 70
No. 100/1, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya, Sri Lanka
Tel: 5880880 Fax: General: 2865606 Marketing: 2868648, 2865612, 2865641 Finance: 2865642 Website: www.lolc.com